**Kalanjiyam International Journal of Tamil Studies**
**களஞ்சியம் - சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
🔍Peer-Reviewed | 🌐 Open Access | 🔗 Crossref DOI &
Global Indexing | 📊 Google Scholar Impact Factor
DOI: https://doi.org/10.63300/kijts15sp012026.14
https://ngmtamil.in/

# வள்ளுவமும் பொருளாதாரமும்

**செ.சுகக்குமார்**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி
வேலூர்(நாமக்கல்).
**முனைவர் சி.சுப்ரமணியன்**
இணைப்பேராசிரியர், தமிழ்த்துறை, கந்தசாமிக் கண்டர் கல்லூரி,
வேலூர்(நாமக்கல்)

**முன்னுரை**

தமிழ் மரபு வாழ்க்கையை மூன்று கூறுகளாக பிரிக்கிறது. அவை அறம், பொருள், இன்பம் என்பவை. இவையே மக்களுக்கு உறுதிப்பொருள்கள் எனவும், அடைய வேண்டியவை எனவும் நூல்கள் வலியுறுத்துகின்றன. வள்ளுவர் இவற்றையே முப்பால் என வகுத்தார். அறத்துப்பால் மக்களின் அகவாழ்வின் ஒழுகலாறுகளையும் தனிமனிதர் என்ற முறையில் வேண்டிய ஒழுகலாறுகளையும் அறம் என வகுத்து வழங்குகிறது. பொருட்பால் மக்களின் அரசியல் மற்றும் சமூக வாழ்வினை விளக்குகிறது. இன்பத்துப்பால் மக்களின் காதலின்பத்தை இலக்கியமாகத் தருகிறது. மனித வாழ்வோட்டத்தில் ‘பொருள்’ இன்றிமையாததாகும். தவிர்க்கமுடியாததுமான ஒன்றாகும். வாழ்க்கையைப் பொருளுள்ளதாக மாற்றுவதும் நம்பிக்கை கொள்ள வைப்பது பொருள் ஆகும். திருக்குறள் உலகில் வாழ்வாங்கு வாழ்வதற்கான வாழ்வியல் நெறிகளை வகுத்துரைத்துள்ளது. குறிப்பாக, மனிதன் பொருளீட்டி எவ்வாறு வாழ வேண்டும் என்பதைத் தெளிவாக எடுத்துரைத்துள்ளது. அவ்வகையில் திருவள்ளுவர் பொருளியல் குறித்தான கருத்துக்களை பொருட்பாலின் வழி இக்கட்டுரை ஆராய்கின்றது.

**பெயர்க் காரணம்**

திருக்குறள் மக்களின் வாழ்க்கை இயல்புகளை மட்டும் அறிவிக்கின்றது. அதனால் இலக்கியமாயிற்று. ஒரு குறிக்கோள் வாழ்வின் இலக்கணங்களை அறிவிப்பதால் இதனை இலக்கிய இலக்கணம் என்று கூடக் கூறி விடலாம். இதனைக் கொண்டு தமிழ் மக்கள் தமது வாழ்க்கையைத் திருத்திக் கொள்வர் என்பதே ஆசிரியர் திருவுள்ளக் கிடைக்கையாதல் வேண்டும்.

எந்த மனிதனும் ஒரு குறிக்கோளை நோக்கியே வாழ்க்கைப் பாதையில் பயணித்தல் வேண்டும். அந்தக் குறிக்கோள் தனது நிலையினும் மேலானதாக இருத்தல் வேண்டும். எத்துணை இடையூறுகள் நேரினும் அதனை நோக்கியே அவன் செல்லுதல் வேண்டும். இதனையே திருவள்ளுவர், ‘உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்’ என்று ஊக்குவிக்கின்றார். இத்தகைய திருக்குறளும் தொல்காப்பியமும் போலக் கருத்தும் அமைப்பும் தமிழுக்கே சொந்தமானதாய்த் தமிழுக்கு உயர்வளிப்பதாய் இருப்பது வேறில்லை.

திருக்குறள் என்பது அழகிய குறள் வெண்பாவினாலாகிய நூல் எனப் பொருள்படும். குறள் என்னும் பாவின் பெயர் அதனாலாகிய நூலிற்கான கருவியாகுபெயர். அது ‘திரு’ என்னும் அடைமொழி அடுத்து வந்தமையின், அடையடுத்த கருவியாகு பெயராயிற்று என்பது இலக்கணவுரையாசிரியர் கருத்து.

“அழகிய குறள் வெண்பாக்களையுடைய நூல் எனப் பொருள்பட்டு அன்மொழித் தொகையாய் நூலுக்குக் காரணக்குறியாயிற்று”[1] என்பர், தமிழ் வரலாறு எழுதிய ச. பூபாலப் பிள்ளை அவர்கள்.

‘திரு’ என்பதைத் தனியடையாகப் பெற்ற திருக்குறளும் தங்கருத்துச் செறிவானும், ஒவ்வொரு மனிதனுடைய வாழ்க்கையோடும் ஒட்டி அவனை வளர்ப்பதானும், ஓசை நயத்தானும் எந்நாட்டவரும், எம்மொழியினரும், எச்சமயத்தினரும் ‘அகரமுதல’ என்ற அடி முதல் ‘முயங்கப்பெறின் ’ என்ற முடிவு வரை பல்காலும் பயிலச் செய்கிறது.

**பொருளியலின் தோற்றம்**

‘மக்கள் யாக்கை உணவின் பிண்டம்’, ‘உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே’ என்பன பழமொழிகள் தமிழகத்தில் தொன்று தொட்டே வழங்கி வருகின்றன. ஒருவனுக்கு உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க உறையுளும் ஆகிய மூன்றும் இன்றியமையாத் தேவையாகும். இன்றியமையாத இம்மூன்றின் தேவை, பங்கீடு, நுகர்ச்சி பற்றி ஆரராய்வதே ‘பொருளியல்’எனும் அறிவியலாகும் என்று சுருக்கமாகக் கூறலாம்.

**பொருளியல் (Economics)**

ஆதியில் இறைவன் உலகினைப் படைத்தான். பின்னர் உலகில் வாழ மனிதனையும் அவனுக்குத் துணை செய்ய ஒரு மனைவியையும் கொடுத்தான். ஆதிமனிதனாகப் பிறந்த மனிதனும், பிறந்த குழந்தை பாலுக்கு அழுவதைப் போலப், பசியால் துடித்துப் பசியைப் போக்க உணவு தேடியலைந்திருப்பான். பசி தன் வயிற்றைக் கிள்ளத் தன் கைக்கு எட்டியதைப் பறித்து உண்டிருப்பான். கைகளைப் பயன்படுத்தி இங்கும் அங்கும் அலைந்து திரிந்து இயற்கை தரும் கனிகளையும், தேனையும், கிழங்குகளையும் உண்டிருப்பான். இயற்கையன்னை செழிப்புடன் கிடந்தது. நீர்வளம் பெருக்கெடுத்தோடியது. இயற்கை தந்த வளத்துடன், மனிதனுடைய சொந்த முயற்சியும் சேர்ந்து, உணவு உற்பத்திச் செய்யத் தொடங்கினான். மனைவியுடன் வாழ நேர்ந்ததால், குழந்தை குட்டிகளும் பெருகிக் குடும்பம் வளரச் சமுதாயம் வளர்ந்தது. உழவுடன், வேறு தொழிலையும் கண்டான். பண்டமாற்று முறையால், தனக்குத் தேவையான பிறபொருளையும் பெற்றான். பண்ட மாற்றுமுறை நன்றாகப் பயன்படாத நிலையில், பணம் எனும் ஒரு கருவியையும் உருவாக்கினான். பணத்தின் நிலையில்லாத இயல்பினையும் உணர்ந்தான். பணத்தின் துணைகொண்டு, தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டதோடு, பிறர்க்கும் கொடுத்துதவிப் பிறர்தேவைகளையும் பூர்த்திச் செய்து, பிறரையும் வாழச்செய்து, மனித இனமே நிலத்தில் நன்றாகக் கால் கொண்டு வாழும்வகையும் கண்டான். இங்ஙணம் மனிதன் இயற்கை தந்த நிலம் நீர்வளத்துடன், தானும் முயன்று உழைத்து, உழைப்பின் பயனைத் தான் நுகர்ந்து பலர்க்கும் பகிர்ந்து

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

அளித்துப், பலரையும் நுகரச் செய்த மனித வாழ்க்கையைப் பற்றிய ஆராய்ச்சியே 'பொருளியல்' என்று கூறப்படும் அறிவியலாகும்.

**பாடும் பொருள் மனிதனே**

திருவள்ளுவர் தம் முப்பாலிலும் தாம் பாடுதற்குரிய பொருளாக மனிதனையே எடுத்துக்கொண்டார். திருவள்ளுவர்க்கு மனிதனே, வானவரைவிடச் சிறந்தவனாகத் தோன்றுகின்றான். மண்ணுலகில் தோன்றிய மனிதன் சிறப்பாக வாழ்ந்து, விண்ணுலகச் சிறப்பினை இந்த மண்ணுலகிலேயே அவன் அடையவேண்டும் அதற்கு என்ன வழி என்று ஆய்ந்து அதனை முப்பாலிலும் வகுத்துக் கூறுகின்றார்.

மனத்துக்கண் மாசு இலாது வாழக் கற்றுக்கொள்கிறான். காதலிக்கிறான். ஒருவர் இருவர் ஆயினர். பின்னர் பலர் ஆயினர். பலர் பொருட்டு வாழ்ந்து படிப்படியாக உலகுக்காக வாழத் தொடங்குகின்றான். தனக்கு என ஒன்றையும் வைத்துக் கொண்டு, என்னுடையது என்று எந்தப் பொருள் மீதும் உரிமை பாராட்டாமல், உலகத்தில் உறவினர் இடையே பற்றற்ற நிலையில் பிறர்க்கென சமுதாய நலன் கருதி வாழக் கற்றுக் கொள்கின்றான். ஆசையிலிருந்து விடுதலை அடைவதால் இந்த நிலையை 'வீடு' என்றும் குறிப்பிட்டனர். இதை,

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"[2]

என்ற குறளளில், மனிதன் தெய்வ நிலையினைப் பெறலாம் என்று கூறுகின்றார். இதற்கு அடிப்படியாக இருப்பது அவன் பொருள் ஆறும் ஆகும். பொருளாட்சியால், ஒருவன் 'தெய்வத்துள் வைக்கப்படும், என்னும் நிலையை அடைகின்றான்.

**ஈட்டலும் பகிர்தலும்**

திருவள்ளுவர்க்குப் பொருளியல் ஓர் அறச் சார்புடைய நூல் (Normative Science). பொருளைப் பொருளுக்காகவே ஆக்குவது அன்று, அதனை அறவழியிலும் ஈட்ட வேண்டும் அதற்காகத் திருவள்ளுவர் 'பழியஞ்சி'ப் பொருளைத் தேடு என்று கட்டளையிடுகின்றார்.

"முயற்சி செய்து பொருளை அறவழியில் தேடு, தேடிய பொருளைப் பகிர்ந்து கொடு. பிறரும் பெற்று நுகரட்டும்"[3] என்று கூறுகிறார்.

மேலே கண்ட கருத்துக்களைச் சற்றுத் திருக்குறள் வழி நின்று விளக்குவோம்.

உழைத்துப் பணத்தைத்தேடி, தேடிய பொருளைத் தக்கார்க்கு உதவி செய்ய வேண்டும். தக்கார்க்கு உபகாரம் செய்வதற்கே பணம் திரட்டப்படுவதாகவும் என்பதைக் கீழ்க்கண்ட குறள் கூறும். பகிர்ந்து கொடுத்தலை,

"தாளாற்றித் தந்த பொருள்எல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தற் பொருட்டு"[4]

அறவழியில் பழிபாவத்திற்கு அஞ்சிப் பணம் சேர்த்து, அதனைப் பலர்க்கும் பகிர்ந்து அளித்து வாழ்ந்து வந்தால், ஒருவனுடைய சந்ததி வாழையடி வாழையாகத் தொடர்ந்து வளரும். தனக்கும் இன்பம், தன்னைச் சார்ந்தாருக்கும் குடும்பத்தாருக்கும் சமூகத்தார்க்கும் நலம் பயக்கும்.

**பொருளும் அருளும்**

'பகுத்துக்கொடுத்து பல்லுயிர் ஓம்பு' என்பது வெறுங்கையைக் கொண்டு முழம்போட முடியாது. பொருள்தானே வாழ்க்கையின் அடிப்படை. இதனையும் திருவள்ளுவர் சுட்டிக்காட்டுகின்றார். அறத்துப்பாலில், இல்லறம், துறவறம் என்ற இரண்டு நெறி முறைகளையும் வகுத்தோதுகின்றார். 'செம்பொருள்' காணத்துணை செய்யும் நெறி இவை. இந்த நெறிகளுக்குப் பொருளும் அருளும் வேண்டும். பொருள் இல்லாதவனுக்கு இந்த உலக வாழ்வே இல்லை. ஒரு நடைபிணம் போன்றது. இம்மண்ணுலக வாழ்வுக்குப் பொருள் வேண்டும், மறுமைக்கு அருள் வேண்டும். இதனை,

"அருளிலார்க்கு அவ்வுலகம் இல்லை பொருளிலார்க்கு
இவ்வுலகம் இல்லை யாங்கு"[5]

திருவள்ளுவர் இக்குறளில் பயன்படுத்தும் உவமை வாயிலாக உலக பொருளியல் வாழ்வில் (Aterial World) பணம் பெறும் இடத்தைமிக நுட்பமாக எடுத்துரைக்கின்றார். அருள் இல்லாதவர்க்கு வீட்டு உலகம் இல்லை. தெரிந்ததைக்கொண்டு தெரியாததை விளக்குவதே உவமானத்தின் இலக்கணம். இந்த முறையில் திருவள்ளுவர், பொருள் இல்லாதவனுக்கு இவ்வுலக நுகர்ச்சி இல்லாதது போல, அருள் இல்லாதவனுக்கு அவ்வுலகம் இல்லை என்று குறிப்பிடுகின்றார். பொருள் இல்லையேல், இந்த உலக வாழ்வே இல்லை என்பது எல்லோர்க்கும் தெரிந்த ஒன்றாகும்.

**பொருளாட்சி**

திருவள்ளுவர், பொருளின் சிறப்பினைத் தமிழ்ப் பண்பாட்டுக்கு ஏற்ப விளக்குகின்றார். பொருளே, இம்மைக்கும் மறுமைக்கும் காரணமாகின்றது. இவ்விரண்டினையும் ஒருவன் பொருளாட்சியாலும் பொருளைப் போற்றும் முறையாலும், காத்துப் பிறர்க்கு வகுத்துக் கொடுக்கும் தன்மையாலும் பெறலாம் என்று திருவள்ளுவர் கூறுகின்றார். தாம் ஈட்டிய பொருள் கொண்டு பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதலால் இப்பிறவியில் பெறக்கூடிய இன்பங்கள் அனைத்தையும் பெறுகின்றான். மேலை நாட்டினர் கூறும் பொருளினால் அடையக்கூடிய இன்பத்தோடு இதனை ஒப்பிட்டுக் கூறலாம். இங்கேதான் 'புலால் மறுத்தல்' என்ற அதிகாரத்தில், பொருளினால் வரும் ஊதியம் (சிறப்பு) பொருளைப் பயனுள்ள வகையில் போற்றாதார்க்கு இல்லை, அதைப்போல அருளினால் வரும் சிறப்பும், அருளைப் போற்றாது ஊனைத் தின்பவர்க்கு இல்லை என்று,

"பொருளாட்சி போற்றாதார்க்கு இல்லை அருளாட்சி
ஆங்கில்லை ஊன்தின் பவர்க்கு"[6]

என்ற குறளில் கூறுகின்றார்.

இந்தக் குறள் அறத்துப்பாலில் இடம்பெற்றிருக்கின்றது. அறத்துப்பால் இல்லறவியல், துறவறவியல் என்ற இரண்டு இயலினை உடையது. இல்லற இயலில் மனைவி மக்களோடு அன்புடன் வாழ்ந்து, பிறர்க்குப் பகிர்ந்து கொடுக்கும் அறமும் செய்ய இம்மை இன்பத்தைப் பெறுகின்றான். இது இல்லறத்தின் பொருளாட்சியால் பெறும் பயனாகும்.

**பொருட்பால்**

அறத்துப்பாலைத் தொடர்ந்து வருவது பொருட்பால். பொதுவாகப் பொருட்பாலில்தான் திருவள்ளுவர் பொருள் தோற்றத்திற்குரியக் காரணங்களையும், பொருளின் ஆற்றலையும், அதன் பயனையும் விரிவாக எடுத்துரைக்கின்றார் என்றும் சாணக்கியர் அர்த்த சாத்திரம் போல் தமிழ்மறை தரும் பொருள்நூல் என்றும் போற்றுவதுண்டு.

பொருட்பாலின் சிறப்பினை அறிந்து உரைவகுத்த பழைய உரையாசிரியர்கள், பரிமேலழகர், மணக்குடவர், பரிப்பெருமாள், பரிதியார், காளிங்கர் முதலியோர் தம் உரைகளில் பொருள் கண்ணோட்டத்தில் பார்;த்து உரை கூறியதுடன், பல இடங்களில் பொருளின் சிறப்பினையும் அது உணர்ந்து திருக்குறள் கூறும் தன்மையினையும் அறிந்து பாராட்டியிருத்தலைப் பல இடங்களில் காணலாம்.

அறத்தின் அடிப்படையில் பொருள்

து.டீ.கிருபாலினி அவர்கள் 'காந்தியடிகளின் வாழ்ககையும் எண்ணமும்' என்ற தலைப்பில் தாம் எழுதிய நூலில் ஒரு சுவையான நிகழ்ச்சியினைக் குறிப்பிடுகின்றார். அது தமிழில் வழங்கும் 'இது என் கலாச்சாரம்: அது என் தொழிலின் ஆசாரம்' என்ற பழமொழிக்கு ஏற்ற விளக்கமாக அமைந்துள்ளது.

நமது நாட்டில் வாழ்ந்த சாணக்கியர் கூட அரசனுக்குப் பொருள் வரும் வழிபற்றிக் கவலை தேவையில்லை. எந்த வழியிலேனும் அரசன் பொருளைத் திரட்டலாம் என்றுதான் அர்த்த சாஸ்தரத்தில் எழுதி வைத்துள்ளார். மேலைநாட்டுப் பேரறிஞர் மார்கஸ் அரேலியஸ் என்பாரும் அரசனுக்கு நாட்டையாளப் பணம் தேவை. அதனைப் பெற, பணம் வரும் வழி குறித்து அரசன் கவலை கொள்ளத்தேவை இல்லை என்று தான் வரைந்துள்ளார்.

இங்ஙனம் உலகில் பொருளை, அரசனோ, தனிமனிதனோ, அறநெறி நின்று தான் திரட்ட வேண்டுமா, கொள்ளையடித்துத் திரட்டலாகாதா என்று விவாதித்துக் கொண்டிருக்குபோது, செல்வம் அருளோடும் அன்போடும் பொருந்தி வரவேண்டும். அதைத்தான் போற்ற வேண்டும். அங்ஙனம் இன்றி வரும் செல்வத்தை அரசனாயினும் சரி, தனிமனிதனாயினும் சரி, போற்றக் கூடாது. தீவினையால் வரும் பொருள் தீமை தருவது என்று கைவிட வேண்டும் என்கிறார்.

"அருளோடும் அன்போடும் வாராப் பொருளாக்கம்
புல்லார் புரள விடல்"[7]

என்ற குறட்பாவில் குறிப்பிடுகின்றார்.

"அன்பும் அருளும் இல்லாது போனால், பிறர் துன்புற வேண்டி வரும். பழிக்கு ஆளாக வேண்டிவரும். பழிசுமந்து பெறும் செல்வத்தை விட சான்றோர் போற்றும் வருமையே மேலானது. பொருளற்ற நிலையே மேலானது"[8] என்பார்.

"பழிமலைந்து எய்திய ஆக்கத்தின் சான்றோர்
கழிநல் குரவே தலை"[9] என்று கூறுகின்றார்.

அரசன் வரி வாங்க வேண்டுமாயினும் வாங்கும் முறையை அறிந்து தீமை நீங்கி மக்களிடமிருந்து பணத்தை வசூலித்தால் அறத்தையும் பெருக்கும்; பிற இன்பத்தையும் தரும். அதைப்போலவே தனி ஒருவனும் பணத்தைத் திரட்டினால் அறனும் இன்பமும் பெருகும். இக்கருத்து

"அறன்ஈனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள்"[10]

என்ற குறளில் கூறப்பட்டுள்ளது.

திருவள்ளுவர் பொருட்பாலிலும், பொருளுக்கு ஏற்றம் தருவதோடு அது வரும் வழிக்கும் முக்கியத்துவம் கொடுக்கின்றார். இதனைச்

"சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு"[11]

என்று 'அறன் வலியுறுத்தல்' என்ற அதிகாரத்தில் கூறிய அறத்தின் தன்மையுடன் பொருளியலும் துவங்க வேண்டும் என்று வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

நமது நாட்டினரும் காதலரிடையே அன்பு சிறிது மறைந்தாலும்,

"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்து எதிர்கோடலும்'இழத்தல் உண்டு"[12]

என்று கூறுவது உண்டு. பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பும் வாழ்வுக்குக் காதல் வாழ்வு பெரிதும் துணையாய் நிற்கின்றது. மனைவியுடன் வீட்டில் இருந்து அவளைச் சார்ந்து இல்லறம் நடத்துவது தாம் ஈட்டியபொருளைப் பகுத்துக்கொடுத்து உண்பது போன்றது என்று பொருளால் பெரும் பயனைத் திருவள்ளுவர்,

"தம்மில் இருந்து தமது பாத்துண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு"[13] என்கிறார்.

**அரசும் பொருளும்**

திருவள்ளுவர் பொருட்பாலில் 'இறைமாட்சி' என்ற அதிகாரத்தின் முதற்குறளிலேயே பொருள் மிகவும் படைத்தவன் அரசருள் ஆண்சிங்கம் போன்றவன் (381) என்று கூறுகின்றார். நிறைய பணபலம் இருந்தால் அரசு செம்மையாக நடக்கும், அரசு நீதி ஒழுங்காக இயங்கும், மக்கள் பிறர்க்குப் பயப்படாமல் பொருள் ஈட்டலாம் என்று கூறுகின்றார். பொருள் நிலையான செம்மையான வலிமைமிக்க அரசுக்குக் காரணமாக அமைகின்றது. இது பயமின்றிப் பொருள் சம்பாதிக்க வழிகோலுகின்றது. பொருளுக்கும், அரசியலுக்கும் உள்ள தொடர்பினை இக்குறட்பாவின் உரையில் உரையாசிரியர்கள் விளக்கி இருத்தலை ஆங்கே காணலாம்.

**பொருளின் சிறப்பு**

திருவள்ளுவர் உலகில் பொருளின் சிறப்பினை நன்கு உணர்ந்தவர். அதனால் தம் நூலில் பல இடங்களில் அதன் மாட்சிமையை விரித்துரைக்கின்றார். பொருளைக்குறிக்க முதல், செல்வம், திரு, பொருள், உடமை, உள்ளம் போன்ற பல சொற்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்துகின்றார். முதல் என்று இரண்டு இடத்தும், செல்வம் என்ற சொல்லை 27 இடங்களிலும், பிறச் சொற்களை பிற இடங்களிலும் பயன்படுத்துகின்றார். பொருள் என்ற சொல்லை மட்டும் 69 குறட்பாக்களில் 76 முறை பயன்படுத்தியுள்ளார்.

முதல் என்பதையே பிறிதொரு குறளில் பொருள் ஆக்கம் கருதித் தம் கையிலுள்ள மூலதனத்தையும் இழக்கக்கூடிய வினையை (தொழிலை) ஊக்கார் அறிவுடையார் என்கிறார்.

“ஆக்கம் கருதி முதலிழக்கும் செய்வினை

ஊக்கார் அறிவுடை யார்”[14]

வாணிபக் கண்ணோட்டத்தில் பொருளைப் பற்றிய கருத்துக்கள் இவை. பொருள் அல்லது செல்வம் என்பது மக்கள் யாவருக்கும் வேண்டும், அரசனுக்கும் வேண்டும், ஆண்டிக்கும் வேண்டும். திருவள்ளுவர்க்கு இம்மை, மறுமை என்ற இருமையிலும் நம்பிக்கை உண்டு. இரண்டிலும் மனிதன் முழுமையாக எல்லா நலன்களையும் பெறவேண்டும். தமிழ்ச்சான்றோர்களுக்கு அறம், பொருள், இன்பம், வீடு எல்லாம் கிடைத்துவிடும் என்பதே திருவள்ளுவரின் முடிந்த முடிவாகும்.

இந்த வகையில் பொருளின் இன்றியமையாமை, அதனை ஆக்கும் வகைபற்றி திருவள்ளுவர் ‘பொருள் செயல்வகை’ என்ற அதிகாரத்தில் விரிவாக எடுத்துரைக்கின்றார்.

திருவள்ளுவர் கண்ணால் காணக்கூடிய பணம், பொருள் முதலியனவற்றை மட்டுமே செல்வமாகக் கொள்ளவில்லை. எந்த வகையில் பணம் எனும் செல்வம் நாட்டின் முன்னேற்றத்திற்கும், மனிதனின் நலனுக்கும் அரசின் வலிமைக்கும் தேவையோ அதைப் போலவே கல்வி, கேள்வி, அறிவுடைமை முதலிய பிறவற்றையும் செல்வம் எனக் கொண்டு, அவையும் தேவை என்று கூறுகின்றார்.

“உள்ளம் உடைமை உடைமை பொருளுடமை

நில்லாது நீங்கி விடும்”[15]

பொருள் எனும் கருவியின் தன்மை இதுவாகும். உன் கையில் உள்ளது. அதனைத்தக்க வழியில் பயன்படுத்துக என்று கூறுகின்றார். விஞ்ஞான அறிவை ஆக்க வேலைக்கும் பயன்படுத்தலாம். அழிவு வேலைக்கும் பயன்படுத்தலாம்.

“அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்

அற்குப ஆங்கே செயல்”[16]

பொருள் போற்றி வாழும் நெறியாகும். நிலைத்து நிற்குமாறு பொருள் கொண்டு என்ன செய்ய வேண்டும்? ‘முதல்’ வைத்து உற்பத்தியைப் பெருக்கு, பிறர்க்குப் பகிர்ந்து கொடு, தொழிலை அபிவிருத்தி செய், நிறைய பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்குமாறு முதலீட்டைப் பெருக்கித் தொழிலை அபிவிருத்தி செய், வேலைவாய்ப்பினைப் பெருக்கு. பசியைப் போக்கி வறுமையை நாட்டிலிருந்தே ஒழித்து, நிலைத்து நிற்கக்கூடிய புகழினைத் திசைதோறும் பரப்புக என்று பொருள் படைத்து வாழும் நெறியினைத் திருவள்ளுவர் கூறுகின்றார்.

**முடிவுரை**

பொருளீட்டல் தொடர்பான முன்னையோர்கள் சிந்தனைகள் தற்கால சமூகத்;திற்கு இன்றியமையாதவை. இன்றைய சமுதாயம் பொளினாலும் பொருளீட்டல் முளைகளினாலும் மனிதநேயம் இழந்த நிலையில் தங்களுக்குள் முரண்பாடுகளை வளர்த்து கொண்ட மக்கள் கூட்டத்தைக் கொண்டிருக்கின்றது. பொருள் மனிதனுக்குத் தேவையான ஒன்றாகும். இருப்பினும்

*தமிழ்த்துறை - சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரி (தன்னாட்சி)

அதனை ஈட்டுவதற்கு பிரயோகிப்பதற்கும் நியமங்கள் உள்ளன. அத்தகைய நியமங்களை இன்றைய சமுதாயத்திற்கு எடுத்துக் கூறும் இலக்கியமாக திருக்குறள் உள்ளதை இக்கட்டுரை வாயிலாக அறிய முடிகின்றது.

**சான்றெண் விளக்கம்**

1. பூபாலப் பிள்ளை, தமிழ் வரலாறு, ப.34
2. திருவள்ளுவர், குறள்.50
3. மேலது, 40
4. மேலது, 272
5. மேலது, 247
6. மேலது, 252
7. மேலது, 735
8. சண்முகம், வள்ளுவம் கூறும் பொருளியல், ப.142
9. மேலது, 657
10. மேலது, 754
11. மேலது, 352
12. சிலம்பு, கொலைக்களக்காதை, பா.வரி.71-73
13. மேலது, 542
14. மேலது, 436
15. மேலது, 591
16. மேலது, 333